Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

09.06.2020 செவ்வாய்க்கிழமை தொடர்புக்கு 076 584 2222

மங்கள சமரவீர

## நாடாளுமன்ற அரசியலுக்கு 'குட்பை'



கொழும்பு, ஜூன் 9
நாடாளுமன்ற அரசியலில் இருந்து விடைபெறப்போவதாக முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர இன்று அதிகார பூர்வமாக

பக்.2

## விருப்பு வாக்கு இலக்க வர்த்தமானி வெளியாகியது!

கொழும்பு, ஜூன் 9
எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கம் அடங்கிய வர்த்தமானி இன்று மதியம் வெளியாகியுள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன. (ஓ,5)

## புதினம்? தெரியுமோ

நேற்று முழுதும் இந்தியப் புடைவை வியாபாரிக்கு வந்த கொரோனாபால் யாழ்ப்பாணமே கதிகலங்கிப் போனது. ஏனெனில் அவருக்கு ஜூன் 3 ஆம் திகதியே கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகிவிட்டது. ஆனால் அவர் மே 31 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தான் தங்கியிருந்துள்ளார். ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்ட உடனேயே அது வெளிப்படுவதில்லை. குறைந்தபட்சம் 14 நாட்கள் ஆகும். ஆகவே இந்திய வியாபாரிக்கு கொழும்பில் குளித்து, உடை மாற்றும் போது,

பக்.2

## 'சூம்' தொழில்நுட்பத்தில் தகவல்கள் திருட்டு

கொழும்பு, ஜூன் 9
தொடர்பாடல் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்குப் பயன்படும் நவீன சூம் தொழில்நுட்பத்தின் 4.6.10 முறைமையின் ஊடாக அதனைப் பயன்படுத்துவோரின் தரவுகள் திருடப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக இலங்கை கணினி விவகார அவசர

பக்.2

# ஜூன் 29 ஆம் திகதி பாடசாலைகள் திறப்பு

ஜூலை 6 வகுப்புக்கள் ஆரம்பம்

ஏ.எல். பரீட்சை செப். 2 ஒக். 2 வரை

புலமைப் பரிசில் பரீட்சை செப். 13

கொழும்பு, ஜூன் 9
கொரோனா வைரஸ் பரவலையடுத்து மார்ச் மாதம் 13ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகள் சுமார் மூன்றரை மாத இடைவெளியின் பின்னர், எதிர்வரும் 29 ஆம் திகதி மீளத் திறக்கப்படவுள்ளன. அதன் பின்னர் நான்கு கட்டங்களின் கீழ் கல்வி நடவடிக்கை ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பக்.2

## தனிமைப்படுத்தல் மையங்களிலும் வாக்களிப்பு!

கொழும்பு, ஜூன் 9
நாடாளுமன்றத் தேர்தலின் போது தேவைப்பட்டால் தனிமைப்படுத்தல் மையங்களிலும், வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்

பக்.2

கொழும்பு மருத்துவமனையில்

## துப்பாக்கி முனையில் கொள்ளை!

கொழும்பு, ஜூன் 9
கொழும்பு தேசிய மருத்துவமனையிலிருந்த பணப் பெட்டியிலிருந்து பணத்தைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக ஒருவர்

பக்.2

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இந்தியருக்கு

## கொரோனா உறுதி




யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் தங்கியிருந்த இந்திய புடைவை வியாபாரிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை இந்தியத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளதாக, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர் அதிகமாக பழகிய 13 பேரின்

பக்.2

## யாழுக்கு மீண்டும் கொரோனா வராது

கூறுகிறார் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவுவதற்கான சாத்தியங்கள் மிகமிகக்

பக்.2

## டெங்கு கட்டுப்பாட்டுக்குள்!

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் மக்களின் ஒத்துழைப்புக் காரணமாக கட்டுப்பாட்டில் இருப்பதாக யாழ்.போதனா மருத்துமனையின் பொதுமருத்துவ நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற செய்தியாளர்

பக்.2

## அமெரிக்காவுக்கு எதிராக போராட முற்பட்டோர் கைது

கொழும்பு, ஜூன் 9
இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற முன்னிலை சோசலிச கட்சியின் உறுப்பினர்கள் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் கொல்லப்பட்ட கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் பிளொ

பக்.2

## நாடாளுமன்ற...

அறிவித்தார். எனவே, பொதுத்தேர்தலில் தனக்கான விருப்பு வாக்கை வழங்கவேண்டாம் என்று மாத்தறை மாவட்ட மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.
மாத்தறை மாவட்டத்திலுள்ள தமது ஆதரவாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர் இந்த முடிவை அறிவித்தார்.
அத்துடன், பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகுவது தொடர்பான தனது முடிவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் மங்கள சமரவீர கடிதம் மூலம் அறிவித்துள்ளார். 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் மங்கள சமரவீர போட்டியிடவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் தூரநோக்குடைய சிந்தனை இல்லை எனவும் அவர் விமர்சித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி இரு அணிகளாக பிளவுபட்டுள்ளமை குறித்தும் அவர் கவலையை வெளிப்படுத்தியுள்ளார். நாடாளுமன்ற அரசியலிருந்து ஓய்வுபெற்றாலும், செயற்பாட்டு அரசியலில் இருப்பேன் எனவும், அதற்கு மாத்தறை மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கோரினார். (ஓ,5)

## ஜூன் 29ஆம் திகதி...

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், ஜூன் மாதம் 29 ஆம் திகதியுடன் பாடசாலை விடுமுறை நிறைவடைகின்றது. அதன் பின்னர் நான்கு கட்டங்களின் கீழ் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.
முதற்கட்டமாக ஜூன் 29ஆம் திகதி அதிபர், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை நிர்வாகத்தினர் சமூகமளிக்க வேண்டும். அன்றைய தினம் மாணவர்கள் வரவேண்டிய தில்லை.
இரண்டாம் கட்டமாக ஜூலை 6ஆம் திகதி தரம் 5, 11 மற்றும் 13 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை ஆரம்பமாகும்.
ஜூலை 20ஆம் திகதி முதல் மூன்றாம் கட்ட நடவடிக்கை ஆரம்பமாகும். 10, 12 ஆம் ஆண்டுகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அன்று பாடசாலைக்கு வருகை தரமுடியும்.
ஜூலை 27 ஆம் திகதி நான்காம் கட்டமாக 3,4,6,7,8 மற்றும் 9 ஆம் ஆண்டு மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதேவேளை, உயர் தரப்பரீட்சை செப்ரெம்பர் 7 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரை நடைபெறும். 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 13 ஆம் திகதி இடம்பெறும், என்றும் அவர் கூறினார். (ஓ,5,44)

## புதினம்? தெரியுமோ

**அதாவது ஜூன் 2 ஆம் திகதி, கொரோனா தொற்றியிருந்தாலும் கூட அதனை இவ்வளவு விரைவில் கண்டு பிடித்திருக்க முடியாது. கொரோனா தொற்றியவுடன் சோதனைகளுக்கெல்லாம் டிமிக்கு கொடுத்துப் பதுங்கி இருந்துவிட்டு, 14 நாள்களின் பின்னரே பாயக்கூடியது. அதனால்தான் அரியாலை ஆராதனையில் பங்குபற்றியவர்களை காங்கேசன்துறையில் 14 நாட்கள் தனிமைப்படுத்திய பின்னரே அவர்களுக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் மட்டுமல்ல,இலங்கையில் இப்படி கொரோனாத் தொற்றுள்ள இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டதும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டு 14 நாட்களின் பின்னரே பி.சி.ஆர் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அப்போதுதான் கொரோனாவைக் கண்டுபிடிக்கமுடியும். இந்த அடிப்படையில் குறித்த இந்திய வியாபாரிக்கு ஜூன் 3 ஆம் திகதி கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால்,அவருக்கு 14 நாட்களுக்கு முன்னரே தொற்று ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தக் கணக்கின்படி பார்த்தால், யாழ்ப்பாணத்தில் புடவை விற்றுத் திரிந்தபோதோ அல்லது அவர் வசித்த பகுதியிலோதான் கொரோனா தொற்றியிருக்கும். இப்போது பிரச்சினை இந்திய வியாபாரிக்கு கொரோனா யாழ்ப்பாணத்தில் தான் தொற்றியதென்றால், இன்னமும் இங்கு கொரோனாக் காவிகள் இருக்கிறார்கள். அதுவும் இலங்கையில் இல்லவே இல்லை என்ற சமூகத் தொற்றை ஏற்படுத்தக் கூடியளவுக்கு, இதுவரை இனம் காணப்படாத கொரோனா நோயாளிகள் அல்லது கொரோனா நோய்க்காவிகள் இன்னமும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தேர்தலை வைப்பதற்காக எல்லாவற்றையும் மூடிமறைத்துவிட்டு, கடைசியில் ஒட்டுமொத்தமாக பேரழிவை வலிந்து அழைக்கப் போகின்றதா இலங்கை அரசு?**



## டெங்கு கட்டுப்பாட்டுக்குள்....

கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அண்மைய நாள்களாக போதனா மருத்துவமனை விடுதிகளில் 30 டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளர்கள் அனைவரும் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இரு டெங்கு நோயாளர்கள் மட்டும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு டெங்குப் பாதிப்பு ஏற்படவில்லை. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பே காரணம். டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தினாலும் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்துவதில் பெரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது, என்றார். (ஓ,5,20)

## ‘சூம்’ தொழில்நுட்பத்தில்...

ஆயத்தக்குழு எச்சரித்திருக்கிறது.
கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, வீட்டிலிருந்தவாறே வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பெருமளவான முன்னணி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் என்பன தமது கூட்டங்களையும் கல்வி நடவடிக்கைகளையும் இதனூடாகவே நடத்துகின்றன. இந்நிலையில் இதுகுறித்து இலங்கை கணினி விவகார அவசர ஆயத்தக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,
தொடர்பாடல் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்குப் பயன்படும் நவீன சூம் தொழில்நுட்பத்தின் 4.6.10 முறைமையின் ஊடாக அதனைப் பயன்படுத்துவோரின் தரவுகள் திருடப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இந்த சூம் முறைமையில் இடம்பெறும் கலந்துரையாடல்கள் ஊடாகத் தகவல்களைத் திருடுவதற்காக இரு வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை சைபர் பாதுகாப்பு தொடர்பான ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன.
அதன்படி இந்த சூம் முறைமையின் பயனர்கள் தமது கலந்துரையாடல்களின் போது ஜிப் வீடியோக்களைப் பரிமாற அனுமதிக்கப்படுக்கின்றது. இதனூடாகத் தகவல்கள் திருடப்படும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அதேபோன்று சூம் முறைமையை பயன்படுத்துவதற்காக இரகசிய இலக்கத்தை கலந்துரையாடல்களில் பரிமாறுவதன் மூலமும் இந்த முறைமையில் தகவல்கள் களவாடப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன.
இதனூடாக மிகவும் இரகசியமான தகவல்கள் கூட தொடர்பற்ற மூன்றாம் தரப்பினருக்குச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஓ,5)

## அமெரிக்காவுக்கு எதிராக.....

யிட்டின் சாவுக்கு நீதிகோரி இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோட்டை நீதிமன்றம் இந்தப் போராட்டத்துக்கு நேற்றுத் தடை விதித்திருந்தது. இன்று கொள்ளுப்பிட்டி சந்தியில் இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தயாரான போது, அங்கு சென்ற பொலிஸார், ஆர்ப்பாட்டத்துக்கு வந்திருந்த சிலரை விரட்டி விட்டு, ஏற்பாட்டாளர்கள் 10 பேரைக் கைதுசெய்து, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (ஓ,5)

## யாழுக்கு...

குறைவு என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று காலை நடத்திய பத்திரிகையாளர் சந்திப் பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாணத்தில் கொரோனா பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. வடக்கில் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. வடக்கில் உள்ள தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் போது ஒரு சிலருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. வடக்கிலுள்ளவர்களுக்கு கொரோனாப் பரவல் தற்போதைய நிலையில் இல்லை என்று உறுதியாகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குச் சென்றுள்ள இந்தியப் பிரஜைக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக அறி யக் கிடைத்துள்ளது. முன்னெச் சரிக்கை ஏற்பாடுகளை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்-என்றார்.(ஓ,5,20)

## தனிமைப்படுத்தல்...

என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
வெளிநாடுகளிலிருந்து திரும்புவோர், இராணுவத்தினரால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் 14 நாள்கள் தங்க வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அடுத்துவரும் வாரங்களில் பெருமளவு இலங்கையர்கள் நாடு திரும்புவதற்காக காத்திருக்கின்றனர். தேர்தல் நடைபெறும் போது, தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருப்போருக்காக அங்கு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தலுக்கான சுகாதார வழிகாட்டல் நெறிமுறைகளில், தனிமைப்படுத்தல் மையங்களில் தேர்தலை நடத்துவதற்கான நடைமுறைகள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் நிலையங்களில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களில், பணியாற்றும் அனைத்து அதிகாரிகளும், உடலை முழுமையாக மறைக்கும் வகையிலான பாதுகாப்பு அங்கி அணிய வேண்டும் என்று அந்த வழிகாட்டு நெறியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

## துப்பாக்கி...

கைது செய்யப்பட்டுள்ளார்.
மருத்துவமனை ஊழியர்களின் மேலதிக நேர கொடுப்பனவை வழங்குவதற்கு கொண்டு வரப்பட்ட பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.
மருத்துவர் ஒருவரை துப்பாக்கி முனையில் பயம் வைத்தே பணம் கொள்ளையிடப்பட்டது.
துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார், கொள்ளையனை மடக்கிப் பிடித்தனர். (ஓ,5)

## யாழ்ப்பாணத்தில்...

மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்காக இன்றைய தினம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் பரிசோதனை முடிவுகள் இன்று இரவு வெளிவரும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஓ,5)

# யாழ்ப்பாணத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

## மாவட்டச் செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 9

பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும், சமநிலையை ஏற்படுத்துவதற்கும் அனைவரும் முன்வர வேண்டும் என்று யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாடு பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக் கொண்ட விசேட சிறப்பம்சங்களையுடைய ஒரு குடாநாடாகும். குறிப்பாக கடற்கரை, மணல் திட்டுகள், பல்வகை உயிரினங்கள் வாழக்கூடிய கடும் காடுகள், நீர் ஏரிகள் என பல்வேறு தரப்பட்ட வகையான விசேடமான சிறப்பம்சங்களைக் கொண்ட குடாநாட்டில் நாங்கள் வசித்து வருகின்றோம். இவற்றை மேலும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

இயற்கையிலிருந்து பல்வேறுபட்ட வளங்களை பெற்றுக் கொள்கிறோம். எனினும் இயற்கை சமநிலையை பேணுவதைத் தவிர்த்து விட்டோம்.

இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

கடந்த காலங்களை ஒப்பிடும் போது எங்களுடைய இலங்கை தற்போது இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதில் நாலாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு வந்துள்ளது. எமது இலங்கை சிறிய தீவாக இருந்த போதிலும், நாங்கள் வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற பல்வேறு இயற்கை பேரழிவுகளைச் சந்தித்து வருகின்றோம்.

இயற்கைக்கு நாங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதே அளவு தான் எமது மானுட இருப்பு பேணப்படும். எனவே நாம் எதிர்கால சமுதாயத்தை சிறந்த ஒரு சமூகமாக உருவாக்குவதற்கு இயற்கை சமநிலையைப் பேண வேண்டியது கட்டாயமான விடயமாகும்- என்றார். (க-111)

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும்

## அமைச்சர் விமல் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 9



எதிர்க்கட்சிகள் மற்றும் நாட்டுக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார். மஹிந்த தேசப்பிரிய, ரட்ணஜீவன் ஹூல் ஆகிய இருவரும் இரு பாத்திரங்களை ஏற்று நடித்தாலும் அவர்களின் இலக்கு ஒன்று தான் எனவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி தேர்தலின் போது கூட தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் வேட்புமனுவை நிராகரிக்க வேண்டும் என எவ்வித அடிப்படை காரணிகளும் இன்றி ஹூல் வாதிட்டுள்ளார். எனவே, அவர் ஏதோவொரு அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படுகின்றமை உறுதியாகின்றது. நாட்டில் தேர்தலை நடத்தும் பொறுப்பு மூவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் இல்லாவிட்டால் கூட கூட்டத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

நாட்டிலுள்ள தேர்தல் ஆணைக்குழு சுயாதீன நிறுவனமாக செயற்படவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன். ரட்ணஜீவன் ஹூலின் அறிவிப்பையடுத்து தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி விலகியிருக்க வேண்டும். புதியவர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை அரசமைப்புச் சபைக்கு வழங்கியிருக்க வேண்டும். வெட்கம், ஆத்ம கௌரவம் இருந்தால் இதனையே அவர்கள் செய்ய வேண்டும். ரட்ணஜீவன் ஹூல் போன்றவர்களைப் பாதுகாத்துக் கொண்டு தான் சுயாதீனமானவர் என்று காட்டிக்கொள்வதற்கு ஆணைக்குழுவின் தவிசாளர் முயற்சிக்கின்றார். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரின் அண்ணன் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் அரசசார்பற்ற அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படுபவர். தம்பியைப் பாதுகாப்பதற்கு அண்ணன் முயற்சிக்கின்றார். எதிர்க்கட்சிகளுக்கு ஓகஸ்டில் தேர்தலை நடத்துவதே தேவையாக உள்ளது. அதனை நிறைவேற்றுவதற்கே தேர்தல் ஆணைக்குழு முயற்சிக்கின்றது- என்றார். (க-44)

## தொண்டர் படையணியின்

# 98 சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜூன் 9

இலங்கை தொண்டர் படையணியின் 98 சிரேஷ்ட அதிகாரிகள், அடுத்த நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என இராணுவச் செயலகம் அறிவித்தது.

பாதுகாப்பு தலைமைப் பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைவாக பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 61 அதிகாரிகள் கப்டன் நிலையில் இருந்து மேஜர் நிலைக்கும் 19 அதிகாரிகள் மேஜர் நிலையில் இருந்து லெப்டினன்ட் கேர்ணல் நிலைக்கும் 14 அதிகாரிகள் லெப்டினன்ட் கேர்ணல் நிலையில் இருந்து கேர்ணல் நிலைக்கும் 4 அதிகாரிகள் லெப்டினன்ட் கேர்ணல் நிலையில் இருந்து கௌரவ கேர்ணல் நிலைக்கும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கை தொண்டர் 1861 ஆம் ஆண்டு சிவில் ரயிபல் குழுவாக தோற்றம் பெற்றது. பின்னர் வெளியிட்ட பிரகடனம் ஒன்றின் ஊடாக காலாட்படை சிப்பாய்களுக்கான அடிப்படையாக மாற்றம் பெற்றது. 1981 சித்திரை மாதம் முதலாம் திகதி இலங்கை தொண்டர் படையணியாக இருந்தது. 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி இலங்கை குடியரசாக மாறியதன் பின்னர் இலங்கை தொண்டர் படையணியாக பெயர் மாற்றம் பெற்றது. இது நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை நூறு அல்லது ஆயிரக்கணக்கிலான உயர் திறனுடனான காலாட்படை வீரர்கள் மற்றும் தொண்டர் தொழில் வல்லுநர்களை நாட்டுக்காக உருவாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# சுகாதார முறைகளைப் பின்பற்றாத பேருந்துகள் மீது சட்டம் பாயும்

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றாமல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்து உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மின் வலுத்துறை மற்றும் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முடக்கப்பட்டிருந்த மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவைகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன. சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்திய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அமையவே போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கும் போது குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் 95 சதவீதம் பின்பற்றப்பட்டுள்ளன.

பேருந்து, ரயில் பயணிகள் ஆசனங்களில் அமர்ந்தவாறு பயணம் செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஒரு சில பேருந்து உரிமையாளர்கள் இந்த நிபந்தனைகளை மீறியுள்ளார்கள். இவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். போக்குவரத்துச் சேவையில் ஈடுப்படும் போது பின்பற்ற வேண்டிய கட்டாய பாதுகாப்பு நிபந்தனைகளால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக தனியார் பேருந்துச் சங்கத்தினர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டார்கள். தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிவாரணம், இலகு வட்டியிலான கடனுதவி, மற்றும் காப்புறுதி ஆகியவற்றை வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

எந்தக் காரணிகளுக்காகவும் தற்போது நடைமுறையில் உள்ள பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்தார்-என்றார். (ப)

# தேர்தல் திகதியை விடவும் கல்வி மிக முக்கியமானது

## என்கிறார் அகிலவிராஜ் காரியவசம்

கொழும்பு, ஜூன் 9

தேர்தல் திகதியை விடவும் மாண வர்களின் கல்விச் செயற்பாடுகள் மிக முக்கியமானதாகும். சஹ்ரானது தாக்குதல் இடம்பெற்ற போது ஏற்பட்டிருந்த நெருக்கடிக்கு மத்தி யிலும் கல்வி அமைச்சர் என்ற வகையில் விரைவில் பாடசாலை களை ஆரம்பித்திருந்தேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன. பாடசாலைக ளின் ஆரம்பம் தொடர்பில் இன்ன மும் எதுவும் தெரிவிக்கப்பட வில்லை. பாடசாலைகளைத் தொடர்ந்தும் மூடிவைத்திருக்க முடியாது. அவற்றைத் திறப்ப தற்கான வேலைத் திட்டமொன்று தேவை. அதனால் மாணவர்களின்



கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான திகதியை அரசாங் கம் அறிவிக்கும் போது பாடசாலை களைத் திறப்பதற்கான திகதிகளை ஏன் அறிவிக்க முடியாது. தேர்தல் திகதியை விடவும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மிக முக்கி யமானதாகும்.

சஹ்ரானது தாக்குதல் இடம்பெற்ற போது ஏற்பட்டிருந்த நெருக்கடிக்கு மத்தியிலும் கல்வி அமைச்சர் என்ற வகையில் விரைவில் பாடசாலை களை ஆரம்பித்திருந்தேன். இதற்கு முழுமையான பாதுகாப்புக ளைப் பெற்றுக் கொடுத்தி ருந்தோம். இதன்போது பலரும் எம்மை விமர்சித்திருந்தனர். ஆனால் பிள்ளைகளின் கல்விச் செயற் பாடுகள் தொடர்பில் அக் கறை செலுத்தியே நாம் இவ்வாறு செய்திருந்தோம். அரசாங்கம் தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றது.

பொருள்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளன. சின்ன வெங்கா யத்தின் விலை சொகுசுப் பொருள்க ளின் விலைக்கு சமமாக உள்ளது. மக்கள் இன்றும் வாழ்வாதார நெருக் கடியை எதிர்கொண்டு வருகின்ற னர். பிள்ளைகளுக்கு போஷாக்கைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை யும் தற்போது தோற்றம் பெற்றுள் ளது - என்றார். (ப)

# பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜூன் 9

பாதாள உலகக் குழு உறுப்பி னர் ஒருவருக்கு போக்குவ ரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார் என்ற குற்றச் சாட்டில் பொலிஸ் கான்ஸ்ட பிள் கைது செய்யப்பட்டார்.

தலங்கம பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளே வெலிகம பொலிஸாரால் கைது செய் யப்பட்டார். (ஐ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 9

மின்சாரம் தாக்கியதில் இந்தியப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அலவத்துகொட பிரதேசத்தில் இன்று நடந் துள்ளது.

தனியார் நிறுவனமொன்றின் மேல் மாடியில் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின்கம்பியில் சிக்கி உயிரி ழந்துள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தியாவைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ் வாறு உயிரிழந்தார். சம்ப வம் தொடர்பில் அலவத்து கொட பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ஐ)

# நீதிமன்றத்தில் முற்படுமாறு ரிசாத் பதியுதீனுக்கு கட்டளை

கொழும்பு, ஜூன் 9

பாதுகாக்கப்பட்ட வில்பத்து சரணாலயத் தின் காட்டுப் பகுதியில், காட்டை அழித்து சட்டவிரோத கட்டுமானங்கள் மற்றும் மீள்குடியேற்றத்தை முன்னெ டுத்தார் எனக் கூறப்படும் விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை நீதிமன்றில் முற்படுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு தொடர்பில் விடயங்களை முன் வைக்க எதிர்வரும் 29 ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றில் முற்படுமாறு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு இந்த மீள அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்று இரண்டா வது தடவையாகவும், மேன்முறையீட்டு நீதி மன்ற நீதிபதிகளான ஜனக் டி சில்வா மற்றும் நிஷங்க பந்துல கருணாரத்ன ஆகியோர் இந்த அறிவித்தலைப் பிறப்பித்தனர். (ப)

போலிக் கையொப்ப விவகாரம்

# பிரதமர் அலுவலகத்தை சேர்ந்தவருக்கு தொடர்பு

கொழும்பு, ஜூன் 9

பணி இடை நிறுத்தம் செய்யப் பட்டிருந்த நிலையில், ஜனாதி பதியின் கையொப்பத்தை போலி யாகப் பயன்படுத்தி, மீள சேவையில் இணைய முயற்சித்த விவகாரத்தில் பிரதமர் அலுவ லகத்தில் சேவையாற்றும் நபர் ஒருவருக்கும் தொடர்புள்ள தாக சி.ஐ.டி. கோட்டை நீதிமன்றுக்கு அறிவித்தது.

இது தொடர்பில் தொடர்ந்தும் தீவிர விசாரணை இடம் பெற்று வருவதாகவும் சி.ஐ.டி. நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டி யது.

ஜனாதிபதியின் கையொப்பம் இடப்பட்ட போலி ஆவணங்க ளைத் தயாரித்து இலங்கை வங்கியில் மீளத் தனது பணி யைப் பெற முயற்சித்தார் எனக் கூறப்படும் குருநாகல், யந்தம்ப லாவ பகுதியைச் சேர்ந்த பிரசன்ன அருணகுமார எனும் நபர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

அவர் குறித்த வழக்கு விசார ணைகள் நேற்றுத் திங்கட்கி ழமை கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலை யில் விசாரணைக்கு வந்தது. அதன்போது சந்தேக நபர் நீதிமன்றில் முற்படாத நிலை யில் மேலதிக விசாரணை அறிக்கையை சி.ஐ.டி. நீதி மன்றுக்கு சமர்ப்பித்து இவ் வாறு தெரிவித்தது. (ப)

# திருவிழா ஆரம்பம்

மன்னார், ஜூன் 9

மன்னார் மறைமாவட்டத் தின் அடம்பன் பங்கைச் சார்ந்த நெடுங்கண்டல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, நேற்றுத் திங்கட்கிழமை கொடியேற்றப்பட்டது.

அடம்பன் பங்குத் தந்தை நவரட்ணம் அடிகளார் புனித அந்தோனியாரின் கொடியை ஏற்றினார். விழா வின் ஆயத்த நாள்களை ஆரம்பித்து வைத்தார். நிகழ் சில் அருட்பணி எமிழ் எழில் ராஜ் அடிகளார் கலந்து கொண்டார். (க-60)



# 362 மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில்

உடுவில், ஜூன் 9

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு அபிவிருத்தி பிரிவினால் நடைமுறைப்படுத்தப் படும் சமுர்த்தி சிப்தொர புலமைப் பரிசில் திட்டத்தில் 362 மாணவர்க ளுக்கான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி முத்திரையைப் பெறுகின்ற குடும்பங்களில் கல்விப் பொது தராதர சாதாரண தராதரப் பரீட்சை யில் சித்தி பெற்று, கல்விப் பொது தராதர உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகையாக மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுகிறது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 87 மாணவர்களுக்கு 2 மாதங்களுக்கான கொடுப்பனவுக ளும், 86 மாணவர்களுக்கு ஒரு வருடத்துக்கான கொடுப்பனவும், 189 பேருக்கு 2 வருடங்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

மாதாந்தம் பாடசாலை வரவை உறுதி செய்யும் பாடசாலை அதி பரின் பரிந்துரையுடன் கொடுப்ப னவு வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. தற்போது கொடுப்பனவுகளை மாதாந்தம் சமுர்த்தி வங்கிப் பிரிவினூடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(க-39)

# நொருங்கியது கார்

வவுனியா, ஜூன் 9

கட்டுப்பாட்டை இழந்த கார் வீதிக்கரையில் இருந்த தொலைபேசிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து வவுனியாவில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நடந்துள்ளது. விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவில் இருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரி நோக்கிப் பயணித்த கார், வவுனியா தேக்கவத்தை பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது வீதிக் கரையில் இருந்த தொலைபேசிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் காரைச் செலுத்தி வந்த நபர் படுகாயமடைந்தார். விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-110,18)

# தொழிற்சங்கம் மீது வழக்கு தாக்கல் வெட்கக்கேடானது

## முன்னாள் எம்.பி. வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

அரசியல் கட்சியொன்று தொழிற்சங்கத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும் எனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், அரசியல் பழிவாங்கலுக்காக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் யாப்பை மீறி நடவடிக்கை எடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகளிலிருந்து எம்மை இடைநீக்கியுள்ளமை தொடர்பில் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கு தனியான யாப்பு காணப்படுகிறது. இந்தச் சங்கத்தில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். இந்தச் சங்கம் அதன் யாப்பிற்கமைய சட்ட ரீதியாக நடத்திச் செல்லப்படுகிறது. எனவே யார் எந்தத் தீர்மானத்தை எடுப்பதாக இருந்தாலும் அரசமைப்புக்கு அமையவே எடுக்கவேண்டும்.

2015 ஆம் ஆண்டு ஹரின் பெர்னாண்டோ இந்தச் சங்கத்தின் தலைவராகவும் நாம் பொதுச் செயலாளராகவும் செயற்குழுவினால் நியமிக்கப்பட்டோம். இந்த நிலையில் அரசியல் பழிவாங்கலுக்காக எம்மீது குற்றஞ்சுமத்தி சிலர் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னரே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகா ஜனா திபதி வேட்பாளராகக் களமிறங்கிய போதும் 2015ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய போதும் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் அந்த வேட்பாளர்களின் வெற்றிக்காகவே செயற்பட்டது. அதேபோன்றே இம்முறையும் செயற்பட்டது. இவ்வாறிருக்கையில் எம்மை பதவியிலிருந்து நீக்குவதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும்? அரசியல் பழிவாங்கலுக்காக எம்மைப் பதவியிலிருந்து நீக்க முடியாது. அரசியல் கட்சியொன்று தொழிற்சங்கத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இவ்வாறான தொழிற்சங்கங்கள் இன்றி ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்யமுடியாது -என்றார். (ப)

# ஆட்சியைக் கைப்பற்றவே போட்டியிடுகிறது ஐ.தே.க.

## அதன் தலைவர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதான போட்டி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலானதாகவே இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருப்பதற்கல்ல, ஆட்சியை கைப்பற்றுவதற்கே போட்டியிடுகிறது என்று ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



ஐ.தே.க.வை விட்டு யார் விலகிச்சென்றாலும் கட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அதனால் விலகிச் சென்றவர்கள் தொடர்பில் அக்கறை செலுத்தாது கட்சிக்குள் தற்போது இருக்கும் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே போதும். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே தீர்வு காணமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மிகப் பழைமை வாய்ந்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே. ஐ.தே.க. பல தேர்தல்களில் தோல்வியுற்றிருந்தாலும் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. எப்போதும் முன்னேறிச் செல்லவே முயற்சித்திருக்கின்றது. தற்போது நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமே பிரதான கட்சிகளாக இருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலில் இந்த இரு கட்சிகளுக்கிடையிலேயே பிரதான போட்டி இடம்பெறப்போகின்றது. நாங்கள் எதிர்க்கட்சியாக வருவதற்கல்ல ஆட்சியை கைப்பற்றுவதற்கே முயற்சித்து வருகின்றோம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது, பொருளாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புகளில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற மக்களுக்கு நிதியுதவியையோ சலுகைகளையோ பெற்றுக்கொடுக்காமல் இருக்கின்றது. மார்ச் மாதத்துக்கு முன்னர் இருந்த நிலைமை தற்போது இல்லை. அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் பாடமொன்றைக் கற்றுக் கொண்டுள்ளோம். இதுவரையில் ஐ.தே.க. தனித்து யானைச் சின்னத்திலும், பொதுக்கூட்டணி அமைத்து அன்னம் சின்னத்திலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளது. இதன்போது பலர் வெற்றி கொண்டுள்ளதுடன் தோல்வியுற்றாலும் கிடைக்கப் பெற்ற வாக்கு வீதங்களில் பெரும் வித்தியாசம் ஏற்படட்டதில்லை. ஆனால் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எம்மைவிட 14 இலட்சம் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி கொண்டுள்ளார். இதற்கான காரணம் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து பார்த்ததில் இவ்வளவு காலமும் ஐ.தே.க.வுக்கு ஆதரவாக வாக்களித்த பலரும் கோத்தாபயவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. இதனால் மீண்டும் இந்தப் பிழையை விடுவதற்கு நாங்கள் விரும்பவில்லை -என்றார். (ப)

# உயர்தர வகுப்புக்கான இணைய விண்ணப்ப கால எல்லை எதிர்வரும் 12ஆம் திகதியுடன் முடிவு

கொழும்பு, ஜூன் 9




2020 உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் இணையத்தில் விண்ணப்பிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியதன் பின் கடந்த மே மாதம் 12ஆம் திகதி தொடக்கம் உயர்தர வகுப்பு அனுமதிகளுக்கான இணைய விண்ணப்பங்கள் ஆரம்பமாகியிருந்தன.

https://info.moe.gov.lk/ எனும் இணையதளத்தில் பிரவேசித்து உயர்தரத்துக்கு அனுமதி பெற உத்தேசிக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு ஒரு விண்ணப்பதாரிக்கு பத்து பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டிருந்தது. (எ-ரீ1)

# 1,35,113 பயனாளிகளுக்கு உதவிக்கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொரோனா காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமுர்த்தி உதவிக் கொடுப்பனவுகள் யாழ்.மாவட்டத்தில் முதலாம் கட்டமாக 1 லட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரி.மகேஸ்வரன் தெரிவித்தார். கொரோனா தொற்றுக் காலப் பகுதியில், நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குக் காலத்தில் அரசின் உத்தரவுக்கமைய சமுர்த்தி வேலைத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கான உதவித் தொகைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. அந்தவகையில் இரண்டாம் கட்டமாக அந்த 1 லட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களில் தற்போதுவரை 1 லட்சத்து 34 ஆயிரத்து 139 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றார். (க-106)

# சிறந்த சேவையை மேற்கொண்டு முன்னோக்கிச் செல்லவேண்டும்

## போக்குவரத்து தொடர்பில் ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 9

மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன், தனியார் பஸ் நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

பஸ்களின் பயண நேரசூசி தொடர்பாக இருந்துவரும் நீண்ட காலப் பிரச்சினையை விரிவாக ஆராய்ந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண வீதிப் பயணிகள்



போக்குவரத்து அதி காரசபை மற்றும் போக்குவரத்து அமைச்சு ஆகியன இணைந்து பயண நேரசூசியொன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அதற்கான தகவல்களை காலம்தாழ்த்தாது ஆராய்ந்து பிரச்சினையைத் தீர்க்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாளாந்தம் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. ஒரு நாளைக்கு சுமார் 07 விபத்து இறப்புக்கள் சம்பவிக்கின்றன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவற்றில் பெரும்பாலானவற்றுக்கு தனியார் பஸ்களே பொறுப்பு என்பதும் தெரியவந்துள்ளது. இது பற்றி கூடுதல் கவனம் செலுத்தி விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார். போக்குவரத்துச் சபை பஸ்களைப் போன்று தனியார் மற்றும் பாடசாலை பஸ்களுக்கும் தனியான நிறத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பயணிகள் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார்துறை ஆரம்பமாகும் வேலை நேரங்களைத் திருத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

தூரப் பயணங்களை மேற்கொள்ளும் பஸ்கள் ஓய்வுக்காக நிறுத்தும் சிற்றுண்டிச் சாலைகளின் சுத்தம் பற்றியும் மிகவும் விழிப்பாக இருக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார். பயணிகளின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவமளித்து உயர் நியமங்களுடன் கூடிய பஸ்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தவும் தீர்மானிக் கப்பட்டது - என்றுள்ளது. (ப)

# சுவாசநோய் தாக்கத்தை குறைத்த முகக்கவசம்!

கொழும்பு, ஜூன் 9

முகக் கவசம் அணியும் நடவடிக்கையால் இலங்கையில் சுவாச நோய் பெருமளவு குறைவடைந்துள்ளது என்று இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் பிரதானி கண்டி வைத்திய சங்கத்தின் தலைவர் துஷ்யந்த மெதகெதர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுபடுத்தும் நோக்கில் முகக் கவசம் அணிந்தமையால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுவாச நோய்களில் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு நோய் தன்மை பெருமளவு குறைந்துள்ளது என்றும், அதனால் நோயாளிகளுக்கு மருந்து வழங்கும் நடவடிக்கையும் பெருமளவு குறைவடைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-ரி1)

# அமெ. இராஜதந்திரி வருகை விவகாரம் அமைச்சரவைக்கு

கொழும்பு, ஜூன் 9

அமெரிக்க இராஜதந்திரி விவகாரத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சு செயற்பட்ட விதம் குறித்து திருப்தியடையமுடியாது. இந்த விவகாரம் தொடர்பில் நாளை புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் கேள்வி எழுப்புவேன்.

இவ்வாறு அமைச்சர் விமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பி.சி.ஆர் பரிசோதனைக்கு உடன்படாமல் அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் நாட்டுக்குள் நுழைந்துள்ளார். இது தொடர்பில் அமெரிக்க தூதுவரை அழைத்து விளக்கம் கோர வேண்டும் என்பதுடன் இலங்கை அரசிடும் கடும் ஆட்சேபனையையும், எதிர்ப்பையும் வெளியிட வேண்டும்.

இராஜதந்திர சிறப்புரிமை இருக்கின்றது என்பதற்காக தொற்றுநோய் பரவும் சூழ்நிலையில் எவரும் இவ்வாறு செயற்பட முடியாது. உள்நாட்டிலுள்ள சட்டதிட்டங்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். சீனா, இந்தியா அல்லது எந்தவொரு நாட்டின் இராஜதந்திரியாக இருந்தாலும் பொறுப்புடனேயே செயற்படவேண்டும்.

அமெரிக்காவில் தற்போது கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகின்றது. எனவே, வைரஸை பரப்பும் நோக்கில் அவர் வந்தாரா என்ற சந்தேகமும் பலருக்கு எழுகின்றது. இந்த இராஜதந்திரி விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சு செயற்பட்டுள்ள விதம் குறித்து நான் திருப்தி அடையவில்லை. எனக்கு அமைச்சரவையில் தான் கேள்வி எழுப்ப முடியும். நாளை நடைபெறும் கூட்டத்தில் இது தொடர்பில் வினா எழுப்புவேன். குறித்த சம்பவம் நடைபெற்ற பின்னர் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டமும் இதுவே- என்றார். (க-44)

# வெவ்வேறு சம்பவங்கள்: ஐவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூன் 9

தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவரும், வீதி விபத்துக்களில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்று திங்கட்கிழமை மாலை நடந்துள்ளன. நாவற்குழி ஐயனார் கோவிலடியில இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய இருவரும், நுணாவில் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் கைதடி நுணாவிலைச் சேர்ந்த 19 வயது இளைஞரும் காயமடைந்தனர்.

அதேவேளை நுணாவில் பகுதியில், இடம்பெற்ற வீதி விபத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரும், மட்டுவில் வடக்கில் இடம்பெற்ற விபத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரும் காயமடைந்தனர். (க-9)

# தொழில்நுட்பபீடம் திறப்பு

கொழும்பு, ஜூன் 9

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்பபீடம் ஹோமாகம பிடிபன தொழில்நுட்ப பூங்காவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் இன்று திறக்கப்பட்டது.

இலங்கையின் முதல் மற்றும் மிகப்பெரிய தொழில்நுட்ப பீடமாக 3 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு ஆயிரத்து 600 மாணவர்கள் கற்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதிய தொழில்நுட்ப பீடம் திறக்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் சிறப்பு நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. முத்திரையை அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் தபால்மா அதிபர் ஜெனரல் ரஞ்சித் ஆரியரத்ன வழங்கினார்.

சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் சுதந்தா லியனகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திருமதி ரேணுகா நில்மினி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)





உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பயன்தரும் மரங்களும் வழங்கப்பட்டன. யாழ்.மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் வளாகத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. (க-20,111)

# மைக்கல் கிளார்க்குக்கு ஆஸியின் உயர் விருது

சிட்னி, ஜூன் 9

ஆஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு அளித்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் 'ஆர்டர் ஆப் ஆஸ்திரேலியா' என்ற உயர் கௌரவ விருதுக்கு மைக்கல் கிளார்க் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு துறையிலும் சாதனை படைக்கும் நபர்களுக்கு அந்த நாட்டு அரசு பல்வேறு விருதுகள் வழங்கி வருகிறது. அந்த வகையில் 2015ஆம் ஆண்டில் உலகக்கிண்ணத்தை வென்ற ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவரான மைக்கல் கிளார்க், ஆஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு அளித்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் 'ஆர்டர் ஆப் ஆஸ்திரேலியா' என்ற விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த விருதை ஏற்கனவே முன்னாள் தலைவர்களான ரிக்கி பொண்டிங், மார்க் டெய்லர், ஸ்டீவ் வாக், ஆலன் போர்டர் உள்ளிட்டோர் பெற்றுள்ளனர். (ம)



# உலகக்கிண்ணம் பிற்போடப்பட்டால் ஐ.பி.எல்.அவசியமே!

மைக்கல் ஹோல்டிங் கூறுகிறார்

IPL

புதுடெல்லி, ஜூன் 9

ரி-20 உலகக்கிண்ணத் தொடர் பிற்போடப்பட்டால் ஐ.பி.எல் தொடர் கட்டாயம் நடத்தப்படவேண்டும். அவ்வாறு நடத்தப்படுவதில் எந்தத் தவறும் இல்லை - என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் மைக்கல் ஹோல்டிங்.

இது தொடர்பில் மைக்கல் ஹோல்டிங் மேலும் தெரிவித்ததாவது:

ரி20 உலகக்கிண்ண விவகாரத்தில் ஐ.சி.சி தாமதமாக இருப்பதால் பயனில்லை என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் ஐ.பி.எல் தொடருக்கு இடம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன்பு எந்த நாட்டினருக்கும் அனுமதி



இல்லை என்று ஆஸ்திரேலிய அரசு சொல்கிறது.

இதன் காரணமாக உலகக்கிண்ணத் தொடர் அங்கு நடைபெறுவதில் சிக்கல் ஏற்படலாம். ரி-20 உலகக்கிண்ணத் தொடர் பிற்போடப்பட்டால் ஐ.பி.எல் தொடரை நடத்த பி.சி.சி.ஐ விரும்புவதில் எந்த தவறுமில்லை.

அதற்கு எல்லா உரிமையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு இருக்கிறது. அடுத்தவர்களின் போட்டியை ஆக்கிரமிக்கும் செயல் இது வல்ல - என்றார். (ம)

# ஐ.பி.எல்.ஆட்டங்களை நடத்துவதற்குத் தயார்

## அமீரகம் அறிவிப்பு

சார்ஜா, ஜூன் 9

ஐ.பி.எல் தொடரை நடத்துவதற்குத் தயாராக உள்ளோம் என்று அறிவித்துள்ளது ஐக்கிய அரபு இராச்சியம்.

கொரோனா பரவல் காரணமாக இந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடர் காலவரையறை இன்றிப் பிற்போடப்பட்டுள்ளது. தொடரை நடத்துவதற்கும் பல தரப்புக்களில் இருந்தும் முனைப்புக் காட்டப்படுகின்றது. இந்தியாவுக்கு வெளியில் வீரர்களை அழைத்துச் சென்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி தொடரை நடத்தவும் பரிசீலிக்கப்படுகின்றது. இந்த நிலையிலேயே ஐ.பி.எல் தொடரை நடத்துவதற்குத் தயார் என்று தெரிவித்துள்ளது அமீரகம். (ம)



# வர்ணனையில் இருந்து விலகினார் பாய்கொட்

லண்டன், ஜூன் 9

சர்வதேச கிரிக்கெட் சபையின் வர்ணனைக் குழுவில் இருந்து விலகினார் ஜெப்ரி பாய்கொட்.

இது தொடர்பில் பாய்கொட் தெரிவித்ததாவது:

'14 ஆண்டுகால சிறப்பான அனுபவங்களுக்காகப் பிபிசிக்கு எனது நன்றிகள். நான் அதை முழுமையாக மகிழ்ச்சியுடன் செய்து வந்தேன். கிரிக்கெட்டை மிகவும் நேசிப்பவன்



நான். என் வர்ணனையை மகிழ்ச்சியுடன் அனுபவித்தவர்களுக்கும், என் வர்ணனைப் பிடிக்காதவர்களுக்கும் நன்றி' என்றார் பாய்கொட். இங்கிலாந்தில் தற்போது ஆர்தர்டன், மைக்கேல் வான், இயன் போத்தம், ஹோல்டிங், நாசர் ஹுசைன் உள்ளிட்டோர் வர்ணனை செய்தாலும் பாய்காட்டின் அந்த விநோதமான யார்க்ஷயர் வட்டார ஆங்கில உச்சரிப்பும், இழையோடும் மெல்லிய நகைச்சுவையும், கறாரான விமர்சனமும் மறக்க முடியாதவை.

இயன் சாப்பல் ஒரு வகையான விமர்சகர் என்றால் பாய்காட் இன்னொரு ரகம். இயன் சாப்பல் ஒரு வீரரைப் புகழ்வதற்கும் விமர்சிப்பதற்கும் ஆழமான காரணங்களை, ஆதாரங்களைக் கொண்டு பேசுவார். பாய்காட் கொஞ்சம் தன் சொந்த உணர்விலிருந்து, உள்ளுணர்விலிருந்து பேசுவார், ஆனாலும் பாய்காட்டிடமிருந்து கிரிக்கெட் கற்றுக்கொள்ளலாம் இயன் சாப்பலிடமிருந்து கிரிக்கெட், கேப்டன்சி, விமர்சன ஆற்றலையும் கற்றுக் கொள்ள முடியும். (ம)

# கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தியது நியூயோர்க்!

நியூயோர்க், ஜூன் 9

அமெரிக்காவில் கொரோனாவின் மையமாக விளங்கிய நியூயோர்க், கட்டுப்பாடுகள் சிலவற்றைத் தளர்த்தியுள்ளது.

அமெரிக்காவின் 50 மாகாணங்களில் கொரோனா தொற்றுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 10 ஆயிரத்தை கடந்தது. அதில் நியூயோர்க் மாகாணத்தில் மட்டுமே 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். நியூயோர்க் நகரம், உலகின் தூங்கா நகரம் என்ற பெயரைப்பெற்றிருந்தது. 24 மணி நேரமும் அது செயல்பட்டுக் கொண்டிருக்கும். கொரோனாவால் 100 நாள்கள் வரையில் முடக்கப்பட்டிருந்த அந்த நகரம் நேற்றுமுதல் மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளது. (ம)



# கொரோனா பலி 408,000

வுகான், ஜூன் 9



கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 8 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

சீனாவின் வுகானில் டிசெம்பர் இறுதியில் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளில் பரவியுள்ளது. ஆரம்பத்தில் சீனாவையும் பின்னர் ஐரோப்பிய நாடுகளையும், அதன் பின்னர் அமெரிக்காவையும் கதிகலங்க வைத்த கொரோனா தற்போது தென்னமெரிக்க நாடுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இன்று மாலை 4 மணி வரையிலான நிலைவரத்தின்படி உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 8 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்சால் 09.06.2020 இல் வெளியிடப்பட்டது.